**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.202/2018**

**P.W.1**

Deposition of Witness of P.W.1 Solemnly affirmed by of this Court on **05.02.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஜம்புலிங்கம் | **Father Name** | : | சுப்பாரெட்டி |
| **Village** | : | சுந்தரராஜபுரம் | **Taluk** | : | மதுரை மாவட்டம் |
| **Calling** | : | | **Age** | : | 61 |

<u>**வாதி தரப்பில் முதல் விசாரணை:**</u>

நான் வழக்கில் 4ம் வாதி. வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். 30.10.2017ம் தேதியில் அழகர்சாமி நாயக்கரின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.12.2018ம் தேதிய ராமக்காளின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.03.2018ம் தேதிய வளர்மதி என்பவரது இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.11.2016ம் தேதிய சிவபிரகாஷ் என்பவர் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.01.2017ம் தேதியியல் A.நாகராஜன் என்பவர் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.08.2017ம் தேதியில் அம்பிகாதேவி பெயரிலுள்ள கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.03.2018ம் தேதிய நாகராஜன் என்பவரது பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.11.2016ம் தேதிய பட்டா எண்.2123க்குரிய இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

09.06.2018ம் தேதிய வில்லங்கசான்றிதழின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.06.2018ம் தேதியில் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.06.2018ம் தேதியில் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்ட மற்றொரு கணினி பட்டா சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.06.2018ம் தேதியில் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.05 17:36:15 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.